1986 ஏப்ரல் 26]

எடுத்திருக்கிறார்கள்? முற்றிலும் மூடப்படுவதற்கு முன்பு முன்னெச்சரிக்கையாக அதைத் தடுப்பதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ஒரு தொழிற்சாலை நலிவுற்றதா என்று கண்டுபிடிப்பதற்கு சாத்தியக் கூறுகள் அதிகம் இல்லை. காரணம், ஏராளமான தொழிற்சாலைகள் இருக்கின்றன. இது ஒன்று. இரண்டாவதாக, வட்டி கட்டாமல் இருக்கும் போது தான் அது நம்முடைய கவனத்திற்கு வருகிறது. 6 காலாண்டுகளுக்கு வட்டி செலுத்தாவிட்டால், நாம் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம். மீண்டும் திறந்து நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்று ஆராய்கிறோம். அப்படி ஆராய்ந்த பிறகு தான் நலிவுற்றதாக அறிவிக்கிறோம். திடீரென்று அறிவிப்பதில்லை.

தைல மரத்திலிருந்து காகித உற்பத்தி.

445—(*வினா எண். 5111)—திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) யூகலிப்டஸ் (தைல மரம்) மரத்தைப் பயன்படுத்தி காகிதம் தயாரிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(ஆ) யூகலிப்டஸ் வைரபிரிட் என்னும் தைல மரத்தை பயன்படுத்தி திருவாளர் சேஷசாயி காகித தொழிற்சாலை மற்றும் தமிழ்நாடு நியூஸ் பிரிண்ட் மற்றும் காகிதம் லிமிடெட் நிறுவனத்தினரால் காகிதம் தயாரிக்கப்படுகிறது. 1985–86 ஆம் ஆண்டில் திருவாளர்கள் சேஷசாயி நிறுவனத்திற்கு தமிழ்நாடு வனத் துறை மற்றும் வனத் தோட்டக் கழகத்திலிருந்து கீழ்க்கண்ட அளவில் மூலப் பொருட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

	வனத் துறை.	வனத் தோட்டக் கழகம்.
யூகலிப்டஸ் ஹைபிரிட் ..	35,000	30,000
யூகலிப்டஸ் கிராண்டிஸ் ..	15,000	30,000
பட்டை உரிக்கப்பட்ட மிளாறு மரங்கள்.	15,000	15,00
மூங்கில்	15,000	30,000

அதே ஆண்டில் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தில் இருந்து தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்திற்கு 40,000 டன்கள் எடையுள்ள யூகலிப்டஸ் ஹைபிரிட் மரங்கள் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன. இம் மரங்கள் கீழ்க்கண்ட தற்காலிக விலைகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

	தற்காலிக விலை டன் ஒன்றுக்கு. ரூ.
யூகலிப்டஸ் ஹைபிரிட்	150
யூகலிப்டஸ் கிராண்டிஸ்	280
பட்டை உரிக்கப்பட்ட மிளாறு மரங்கள் ..	250
மூங்கில்	100

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தைல மரத்தைப் பயன்படுத்தி, காகிதம்—செய்தித் தாள் போன்றவற்றை, தனியார் துறை தயாரிப்பது போல், தொழில் துறையும் வனத் துறையும் சேர்ந்து இப்படி ஒரு தொழிற் சாலை நிறுவ முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே, தமிழ்நாடு காகித ஆலை, புகளூரில் இந்த மாதிரியான காகிதம்-செய்தித்தாள் தயாரிக்க, 40,000 டன் ஒதுக்கப்பட்டி ருக்கின்றது. வனத் துறை உதவியோடு தான் புகளூரிலே இருக்கிற காகிதத் தொழிற்சாலை, கரும்பு சக்கை உதவியைக் கொண்டும், தற்போது அரசுத் துறையாக இயக்கப்பட்டு வரு கிறது.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புகளூரிலே உள்ள காகித ஆலைக்கு எத்தனை டன் தைல மரம் அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, 40,000 டன்.

திருச்சியில் அறிவியல் அருங்காட்சியகம்.

446 —(*வினா எண். 5143) —திரு. அ. மலர்மன்னன் : **மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—**

(அ) திருச்சி மாநகரில் அறிவியல் அருங்காட்சியகம் (Science Museum) நிறுவும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?